


# திருப்புறம்பியம் ஸ்ரீசாட்சிநாதேஸ்வரர்

- ஞானரமணன்



நவநாத சித்தர்கள்தாம் இறைவனுடைய அனைத்துக் காரியங்களுக்கும் இறைவனாகவே சாட்சியாக நிலைகொள்ளுமாறு தோற்றம் பெற்றவர்கள். இவர்களுடைய திவ்விய பூமித் தலங்களுள் ஒன்றாக விளங்குவதே கும்ப கோணம் புளியஞ்சேரி இன்னம்பூர் அருகி லுள்ள திருப்புறம்பியம் ஸ்ரீசாட்சி நாதேஸ்வரர் திருக்கோயிலாகும்.

எத்தனையோ நிகழ்ச்சிகளுக்கு மனிதகள் சாட்சியாக இருக்க வேண்டி உள்ளது. பல சமயங்களில், நடந்ததைச் சொன்னாலும் அது உண்மையாக ஏற்கப்படுவதில்லை. சில இடங் களில் பொய்களேதான் உண்மையாக சட்டத்தின் கண்களுக்குப் புலப்படுகின்றது. தெய்வீகத்தில் கூட பூலோகத்தில் உண்மை என்பது மேலுலகங்களில் மாறி விடும். பூலோகத்தில் சொல்லப்படுகின்ற பொய் விண்ணுலகங்களில் உண்மையாவதும் உண்டு. அமாவாசையைப்